# அபிஷேகம்

*Rev. Dr. A. பிரகாசம்*

*B.sc, M.A, M.Ed, D.D.*

**இயேசுவின் துதிச் சக்கர ஊழியம்**

*4, லேபர் கிணறு மூன்றாவது தெரு,*

*ஆதம்பாக்கம், சென்னை — 600088*

*செல்: +91 98412 98464*

# அபிஷேகம்

*Rev. Dr. A. பிரகாசம்*

*B.sc, M.A, M.Ed, D.D.*

**இயேசுவின் துதிச் சக்கர ஊழியம்**

*4, லேபர் கிணறு மூன்றாவது தெரு,*

*ஆதம்பாக்கம், சென்னை — 600088*

*செல்: +91 98412 98464*

**WOG BOOKS 105**

First Edition 2024

**Author / *ஆசிரியர்*:**

*Rev. Dr. A. பிரகாசம் B.sc, M.A, M.Ed, D.D.*

**Copyright: Public Domain / *இலவசம் / பொதுதளம்***

This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us. *இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.*

**Download / *பதிவிறக்கம்*:**

www.WordOfGod.in and www.Archive.org

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1.1 | அபிஷேகம் என்றால் என்ன? | 2 |
| 1.2 | அபிஷேகிக்கப்பட்ட பொருட்கள் யாவை? | 2 |
| 1.3 | அபிஷேகிக்கப்பட்டவர்கள் யார்? | 4 |
| | க்) ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்கள்<br>ங்) ராஜ அபிஷேகம்<br>ச்) தீர்க்கதரிசன அபிஷேகம்<br>ஞ்) இயேசுவின் அபிஷேகம் பெற்றவர்கள் | 4<br>8<br>13<br>15 |
| 1.4 | அபிஷேகிக்கப் பயன்படுத்தப்பட்டவை யாவை?<br>எதனால் அபிஷேகித்தனர்?<br>எப்படி அபிஷேகித்தனர்? | 17 |
| 1.5 | யார் மூலம் அபிஷேகம் கொடுக்கப்பட்டது?<br>யாருக்கு அபிஷேகம் கொடுக்கப்பட்டது? | 21 |
| 1.6 | பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்னால் என்ன?<br>பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுதல், நிரப்பப்படுதல்,<br>முத்திரைப்போடப்படுதல் | 22 |
| 1.7 | அபிஷேகம் ஏன் கொடுக்கப்பட்டது? | 23 |
| 1.8 | யாருக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம்?<br>பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறுவது எப்படி? | 28 |
| 1.9 | அபிஷேகம் பெறுபவர்களுக்கு கர்த்தர் செய்வது என்ன? | 31 |
| 1.10 | பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள், நிரப்பப்பட்டவர்கள் யார்? | 32 |
| 1.11 | அபிஷேகம் பெற்றதன் அடையாளம் என்ன? | 36 |
| 1.12 | ஒரு விசுவாசி என்ன செய்ய வேண்டும்? | 37 |

## 1.1 அபிஷேகம் என்றால் என்ன?

பழைய ஏற்பாட்டு காலத்தில் (ஒலிவ) எண்ணையை அல்லது அபிஷேக தைலத்தை ஊற்றி, பொருட்களையும், மனிதர்களையும் பரிசுத்தமான உபயோகத்திற்காக, தேவ ஊழியத்தைச் செய்ய பிரித்து வைப்பது அபிஷேகம் எனப்படும். யாத். 30:26–28ல் உள்ள பொருட்களை அபிஷேகம் பண்ணி, "அவைகள் மகா பரிசுத்தமாயிருக்கும் படிக்கு, அவைகளை பரிசுத்தப்படுத்துவாயாக; அவைகைளத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கம்." யாத். 30:29.

புதிய ஏற்பாட்டு காலத்தில் – பரிசுத்த ஆவியானவர் மனிதர்கள் மேலிறங்கி, தங்கியிருந்து, (1 கொரி. 3:16; 6:19, 2 கொரி. 6:16) அவர்களை நிரப்பி (அப். 2:4), அந்த மனிதர்கள் மூலம் கிரியை செய்வது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எனப்படும்.

**வகைகள்**

1. ஆசாரிய ஊழியம் செய்ய ஆசாரிய அபிஷேகம்.
2. ராஜா தன் நாட்டை ஆள ராஜ அபிஷேகம்.
3. தீர்க்கதரிசனம் உரைக்க தீர்க்கதரிசன அபிஷேகம்.
4. பரிசுத்த பொருட்களை பயன்படுத்த பொருட்கள் அபிஷேகம்.
5. மனிதர்கள் மூலம் கிரியை செய்ய பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.

## 1.2 அபிஷேகிக்கப்பட்ட பொருட்கள் யாவை?

1. **கல்தூண் :** ஆதி. 31:13 – (யாக்கோபு) தூணுக்கு அபிஷேகஞ் செய்து, (கர்த்தருக்கு) ஒரு பொருத்தனையை பண்ணின பெத்தேலிலே உனக்கு தரிசனமான தேவன் நானே.

2. **ஆசரிப்புக்கூடாரம் : வாசஸ்தலம்**

யாத். 30:26 – ஆசரிப்பு கூடாரத்தை அபிஷேகம் பண்ணு.

யாத். 40:9 – வாசஸ்தலத்தை அபிஷேகம் பண்ணு என்று கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

லேவி. 8:10 – மோசே வாசஸ்தலத்தை அபிஷேகம் பண்ணினார்.

எண். 7:1 – மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்தி (முடித்தார்).

**3. சாட்சிப் பெட்டி :**

யாத். 30:26 – சாட்சி பெட்டியை அபிஷேகம் பண்ணு, என கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

**4. மேஜை, அதின் பணி முட்டுகள் (துட்டு, தூப கரண்டி, பானபலி, கரங்கள், கிண்ணங்கள்) :**

யாத். 30:27 – மேஜை, அதின் பணி முட்டுக்கள் எல்லாவற்றையும் அபிஷேகம் பண்ணு, என கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

**5. குத்துவிளக்கு, அதின் கருவிகள் (கத்தரிகள், சாம்பல், பாத்திரங்கள்)**

யாத். 30:27 – குத்து விளக்கையும், அதின் கருவிகளையும் அபிஷேகம் பண்ணு என்றார் கர்த்தர் மோசேயிடம்.

**6. தூப பீடம் :**

யாத். 30:27 – தூபபீடத்தை அபிஷேகம் பண்ணு, என கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

**7. தகன பலி பீடம், அதின் பணி முட்டுக்கள் (சட்டி, கரண்டி, கிண்ணி, முள் துறடு, நெருப்பு, வெண்கல சல்லடை) :**

யாத். 29:36 – பாவ நிவர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவ நிவாரண பலியாகப் பலியிட்டு, பலி பீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்த பலி பீடத்தைச் சுத்தி செய்ய வேண்டும். அதைப் பரிசுத்தம்படுத்தும்படி அதை அபிஷேகிக்கக் கடவாய்.

யாத். 30:28 – தகன பலிபீடத்தையும் அதின் அதின் பணி முட்டுகள் எல்லாவற்றையும் அபிஷேகம் பண்ணு.

யாத். 40:10 – தகனபலி பீடத்தையும், அதின் சலக பணி முட்டுகளையும் அபிஷேகம் பண்ணி, அதை பரிசுத்தப்படுத்துவாயாக.

லேவி. 8:11 – பலிபீடத்தின்மேல் ஏழு தரம் தெளித்து, பலிபீடத்தையும், அதின் சகல பணி முட்டுகளையும் அபிஷேகம் பண்ணினான்.

எண். 7:1 – பலிபீடத்தையும், அதின் எல்லா பணிமுட்டுகளையும் அபிஷேகம் பண்ணி, பரிசுத்தப்படுத்தினான்.

**8. தொட்டி, அதின் பாகம் :**

யாத். 30:28, 40:11 – தொட்டியையும் அதன் பாகத்தையும் அபிஷேகம் பண்ணு.

லேவி. 8:10 – தொட்டியையும், அதன் பாகத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணு.

**9. ஆரோனின் வஸ்திரம், அவன் குமாரனது வஸ்திரம் :**

யாத். 29:21 – ஆரோனும், அவன் வஸ்திரங்களும் அவனுடைய குமாரரும், அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கும்படிக்கு அவன் மேலும் அவன் வஸ்திரங்கள் மேலும், அவனுடைய குமாரர்கள் மேலும், அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிப்பாயாக.

லேவி. 8:30 – ஆரோன் மேலும், அவன் வஸ்திரங்கள் மேலும், அவன் குமாரர் மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும் அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்.

## 1.3 அபிஷேகிக்கப்பட்டவர்கள் யார்?

### க்) ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்கள்

**1. ஆரோன், அவன் குமாரர் நாலு பேர்**

யாத். 28:41 – உன் சகோதரனாகிய ஆரோனும், அவனோடேகூட அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகஞ் செய்து, அவர்களை பிரதிஷ்டை பண்ணி, அவர்களை பரிசுத்தப்படுத்துவாயாக.

யாத். 29:7 – (ஆரோனை) அபிஷேகஞ் செய்வாயாக.

யாத். 29:9 – (ஆரோனை) அவன் குமாரரையும் பிரதிஷ்டை செய்வாயாக.

யாத். 29:21 – (ஆரோனும்) அவனின் வஸ்திரங்களும், அவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாகும்படி அவன் மேலும், அவனுடைய குமாரர் மேலும், அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிப்பாயாக.

யாத். 29:29 – (ஆரோனின்) பரிசுத்த வஸ்திரங்கள், அவனுக்குப் பின் அவனுடைய குமாரரைச் சேரும். அவர்கள் அவைகளை உடுத்திக்கொண்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு பிரதிஷ்டையாக்கப்படுவார்கள்.

யாத். 30:30 – ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிககு, நீ அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக.

யாத். 40:13 – ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி, அவனை பரிசுத்தப்படுத்துவாயாக.

யாத். 40:14 – அவன் குமாரரையும் வரச்செய்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்து,

யாத். 40:15 – அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி, அவர்களையும், அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடியே அபிஷேகம்பண்ணுவாயாக.

லேவி. 6:20 – ஆரோன் அபிஷேகம்பண்ணப்படும் நாளில் அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய படைப்பு – நித்திய போஜனபலி.

லேவி. 6:22 – அவன் குமாரரில் அவனுடய ஸ்தலத்திலே அபிஷேகம் பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படியே செய்யக்கடவன்.

கர்த்தர் சொன்னபடி மோசே செய்தான்.

லேவி. 8:12 – அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினேன்.

லேவி. 6:30 – மோசே அபிஷேகதைலத்திலும் பலிபீடத்தின் மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன் மேலும், அவன் வஸ்திரங்கள் மேலும் அவன் குமாரர் மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும், அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்.

எண். 3:2 – ஆரோனுடைய குமாரர் – நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார்.

எண். 3:3 – ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கு அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அபிஷேகம் பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகளே.

## 2. சாதேக்

1 நாளா. 29:22 – (சபையார்) சாதேக்கை ஆசாரியனாக அபிஷேகம் பண்ணினார்கள்.

## 3. மற்ற ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களே. (அவர்களது அபிஷேகம் பற்றி குறிப்பிடப்படவில்லை).

1. எலெயாசார் – எண். 20:26 – கானான் போகும் வழியில்
2. பினெகாஸ் – நியா. 20:28 – நியாயாதிபதி காலத்தில்
3. அபிசுவா – 1 நாளா. 6:50 – கிதியோன் காலத்தில்
   அபியேஸ்ரியர் – நியா. 6:34 – நியாயாதிபதிகள் காலத்தில்

4. புக்கி – 1 நாளா. 6:5 – நியாயாதிபதிகள் காலத்தில்
5. ஊசி – 1 நாளா. 6:5 – நியாயாதிபதிகள் காலத்தில்
6. செராகியா – 1 நாளா. 6:5 – நியாயாதிபதிகள் காலத்தில்
7. மெராயோத் – 1 நாளா. 6:5 – சாமுவேல் காலத்தில்
8. அமரியா – 1 நாளா. 6:7 – சவுல் காலத்தில்
9. அகிதூப் – 1 நாளா. 6:5
10. அபிமெலேக் – சவுலால் கொல்லப்பட்டவர்
11. சாதோக் – 1 நாளா. 6:8 – சவுல், தாவீது, சாலொமோன்
12. அபியத்தார் – சாதோக்குடன் தாவீது காலத்தில் சாலொமோன் காலம்
13. அகிமாஸ் – சாலொமோன், ரெகோபெயாம் காலம்
14. அசரியா (அமரியா)– ஆசா, யோசெபாத் காலம்
15. யோகனான் (யோய்தா) – யோசபாத், யோராம், அகசியா, இல்க்கியா, யோவாஸ் காலம்.
16. அசரியா (சகரியா)– யோவாஸ் காலம்
17. அமரியா – யோவகாஸ், அமரியா, உசியா காலம்
18. அசரியா – உசியா காலம்
19. அகிதூப் – உசியா, யோதாம் காலம்
20. சாதோக் – உசியா, யோதாம் காலம்
21. உரியா – ஆகாஸ், எசேக்கியா காலம்
22. உரியா – ஆகாஸ், எசேக்கியா காலம்

23. உரியா – எசேக்கியா காலம்

24. இல்க்கியா – எசேக்கியா, மனாசே, யோசியா காலம்

25. அசரியா – ஆமோன், மனாசே, யோசியா காலம்

26. செராயா – யோவகாஸ், யோவாக்கீம் காலம்

27. யோசதாக் – யோவாக்கீம், சிதேக்கியா காலம்

28. பஸ்கூர் காலம்

29. செப்பனியா

30. யோசுவா (யெசுவா)

31. எஸ்றா

## ங்) ராஜ அபிஷேகம்

### அ) எப்பிராயீம் கோத்திரத்திற்கு ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டவர்

**1. அபிமெலேக்**

நியா. **9:8** – விருட்சங்கள் (மனிதர்கள்) தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம் பண்ணும்படி போயின.

நியா. **11:15** – முட்செடி: நீங்கள் என்னை (அபிமெலேக்) உங்களுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறது மெய்யானால் என் நிழலிலே வந்தடையுங்கள்.

### ஆ) 12 கோத்திரங்களுக்கும் ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டவர்கள்

**1. சவுல்**

**1** சாமு. **9:16** – கர்த்தர் சாமுவேலிடம் (சவுலை) இஸ்ரவேலின் மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணக்கடவாய் என்றார். சாமுவேல் கர்த்தரின் வார்த்தையின்படி சவுலை அபிஷேகிக்கித்தார்.

2 சாமு. 10:1 – சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, சவுல் தலையின்மேல் வார்த்து; "கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார்."

## 2. தாவீது

### முதலாம் அபிஷேகம்

1 சாமு. 16:1 – கர்த்தர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்த மட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய்; நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டுவா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார்.

1 சாமு. 16:3 – நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம் பண்ணுவாயாக என்றார்.

1 சாமு. 16:11 – சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை (தாவீதை) அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்கமாட்டேன் என்றான்.

1 சாமு. 16:12 – ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார்.

1 சாமு. 16:13 – சாமுவேல் தைலக்கொம்பை எடுத்து, அவனை (தாவீதை) அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்.

### இரண்டாம் அபிஷேகம்

2 சாமு. 2:7 – சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னை (தாவீதை)த் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று அவர்களுக்குச் சொல்லச்சொன்னான்.

(தாவீது) தான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும், தான் இன்னும் பலவீனன் (2 சாமு. 3:39) என்று அறிந்திருந்தார்.

## மூன்றாம் அபிஷேகம்

2 சாமு. 5:3 (1 நாளா. 11:3) – இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள், தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

தாவீது ராஜா 3 முறை ராஜ அபிஷேகம் பெற்றார்.

## 3. அப்சலோம்

2 சாமு 19:10 – நமக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்.

## 4. சாலொமோன்

தாவீது ராஜா சாதோக், நாத்தான், பெனாயாவிடம் 1 இராஜா. 1:33 என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

1 இராஜா. 1:34 அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவார்கள்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள் என்றான்.

1 இராஜா. 1:39 ஆசாரியனாகிய சாதோக்கு, தைலக் கொம்பை கூடாரத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், சாலொமேனை அபிஷேகம் பண்ணினான்.

நடந்த நிகழ்ச்சிகளை ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான், அதோனியா அவனோடிருந்தவர்களுக்கு கூறினான்.

1 இராஜா. 1:45 ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கத்தரிசியாகிய நாத்தானும், (சாலேமோனை) கீகோனிலே ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

1 நாளா. 29:12 (ஜனங்கள்) தாவீதின் குமாரனாகிய சாலோமோனை இரண்டாம் விசை ராஜாவாக்கி, கர்த்தருக்கு முன்பாக அவனை அதிபதியாக அபிஷேகம் பண்ணினர்.

முதல் முறை சாலொமோனை அபிஷேகித்ததை தாவீது காணவில்லை இரண்டாவது சாலொமோனை அபிஷேகித்ததை தாவீது கண்டார், சாலொமோனின் அபிஷேகத்தை.

2 நாளா. 6:42 (சங். 132:10) நீர் அபிஷேகம் பண்ணினவன் (சாலொமோன்) முகத்தை புறக்கணியாமல், உம் தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கிருபைகளை நினைத்தருளும், என வாசிக்கிறோம்.

தீருவின் ராஜா ஈராம், சாலொமோனை அவனுடைய பிதாவின் ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள், என்று கேள்விப்பட்டு தன் ஊழியக் காரரை அனுப்பினான் (1 இராஜா. 5:1)

சாலொமோன் செய்த விக்கிரக ஆராதனையினாலும், ரெகோபெயாம் முதியோரது நல்ல ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபரது துன்மார்க்க ஆலோசனையை ஏற்றுக்கொண்டதால், இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாக பிரிந்தது, யூதா ராஜ்யம் (தென் ராஜ்யம், 2 கோத்திரங்கள்) இஸ்ரவேல் ராஜ்யம் (வட ராஜ்யம் 10 கோத்திரங்கள்) என பிரிந்தது.

## இ) இஸ்ரவேலின் 10 கோத்திரங்களாகிய வட ராஜ்யத்திற்கு ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டவர்

### 1. யெகூ

2 இராஜா. 9:1–3 தீர்க்கதரிசியாகிய எலிசா, தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவனை அழைத்து நீ இடை கட்டிக்கொண்டு, இந்த தைலக் குப்பியை உன் கையில் எடுத்துக்கொண்டு கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குப் போ, நிம்சியின் மகனான யோசாபாத்தின் குமாரன் யெகூ எங்கே இருக்கிறான் என்று பார்த்து, அவனை உள்ளான ஒரு அறையிலே அழைத்துக் கொண்டுபோய், தைலக் குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, உன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக

அபிஷேகம் பண்ணினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி, கதவைத் திறந்து தாமதியாமல் ஓடிப்போ என்றான்.

எலிசாவின் சொற்படியே தீர்க்க தரிசிகளின் புத்திரன் செய்தான் (1 இராஜா. 29:4–6) அவன் எலிகூவிடம் இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், "உன்னைக் கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன்".

யெகூ திரும்பி வந்தபோது மற்றவர்கள் கேட்ட போது, யெகூ, அவன் நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொன்னான் (2 இராஜா. 9:12) என்றான்.

கர்த்தர் எலியாவிடம், நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணு (1 இராஜா. 19:16) என்ற வசனம் நிறைவேறியது.

## ஈ) யூதாவின் 2 கோத்திரங்களாகிய தென் ராஜ்யம்

### 1. யோவாஸ்

2 இராஜா. 11:12 (2 இராஜா. 23:11) (2 இராஜா. 11:1–11 வாசிக்க) (ஆசாரியனாகிய யோய்தா) ராஜகுமாரனை (யோவாஸ்) வெளியே கொண்டு வந்து, கிரீடத்தை அவன் மேல் வைத்து, சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்தான், இப்படி அவனை ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணினர்.

### 2. யோவாகாஸ்

2 இராஜா. 23:30 தேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை அபிஷேகம் பண்ணினர்.

ஆனால் அவன் தகப்பனாகிய யோசியாவின் வழி நடவாமல், அவன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான் (வசனம் 32) பார்வோன் நேகோ, யோவாகாசைப் பிடித்துக் கட்டி, எகிப்துக்குக் கொண்டு போனான், எகிப்திலே மரணமடைந்தான் (வசனம் 33, 34).

சங்கீதக்காரன் சங். 89:38, 39ல் "நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்மேல் உக்கிரமானீர், உமது அடியானுடன் பண்ணின உடன்படிக்கையை ஒழித்துவிட்டு, அவன் கிரீடத்தை தரையிலே தள்ளி அவமானப்படுத்தினீர்" என்கிறான்.

எரேமியாவும் புல. 4:20 கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன், அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டான் என புலம்புகிறார்.

கர்த்தர், அபிஷேகத்தை தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் புத்திரர் மீது மட்டுமல்ல, புறஜாதிகள் மீதும் பழைய ஏற்பாட்டு காலத்திலே ஊற்றினர், புதிய ஏற்பாட்டு காலத்திலும் ஊற்றினர், ஊற்றுகிறார், அபிஷேகம் யூத ஜனங்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே.

### உ) புறஜாதி ராஜாக்களுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்

#### 1. ஆசகேல்

1 நாளா. 19:15 கர்த்தர் எலியாவிடம் நீ தமஸ்கு வழியாய் வனாந்திரத்திற்கு திரும்பிப்போய் ஆசகேலைச் சீரியாவின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணு.

1 இராஜா. 8:15 ஆசகேல் (சீரியாவின் ராஜா பெனாதரத்துக்கு பதிலாக) ராஜாவானான்.

#### 2. கோரேஸ்

ஏசா. 45:1 கர்த்ராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேஸ்.

## ச்) தீர்க்கதரிசன அபிஷேகம்

#### 1. எலிசா

கர்த்தர் எலியாவிடம் சொன்னார்.

1 இராஜா. 19:16 ஆபேல் மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு.

எலியா கீழ்படிந்து அபிஷேகித்தார்.

1 இராஜா. 19:19 – 12 ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான், அவன் பன்னிரெண்டாம் ஏரை ஒட்டிக்கொண்டிருந்தான்; எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்.

எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ள முன் அந்த சால்வையைப் பெற்றுக்கொண்டான் எலிசா, ஆவியின் வரம் இரட்டிப்பாக கிடைத்தது. (2 இராஜா. 2:1–15 வாசிக்க).

## யார் அந்த 2 பேர்

சக. 4:1–14 சகரியா தீர்க்கதரிசிக்கு கர்த்தர் கொடுத்த தரிசனத்தில் பொன்னினால் செய்த குத்துவிளக்கு, அதின் உச்சியில் கிண்ணம், அதில் மேல் 7 அகல்கள், அதின் உச்சியிலிருக்கிற அகல்களுக்கு, போகிற 7 குழாய்கள் கண்டார். கிண்ணத்திற்கு வலது புறமாக ஒன்றும், இடது புறமாக ஒன்றும், ஆக 2 ஒலிவ மரங்கள் இருக்கிறதைக் கண்டார், இந்த 2 ஒலிவ மரங்கள் என்னவென்று கேட்டார், கர்த்தர் இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமூகத்தில் நிற்கிற அபிஷேஷகம் பெற்றவர்கள் என்றார், அந்த இருவர் யார்?

## அ) சகரியா புத்தகத்தில் வரக்கூடிய 2 பேர்

சக. 3:1 பிரதான ஆசாரியனாகிய யோசுவா.

சக. 4:9 செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டது.

ஆகா. 2:4 செருபாபேலே, நீ திடன் கொள், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்றும் பிரதான ஆசாரியனே நீ திடன் கொள்.

எஸ்றா 2:2 செருபாபேல், யெசுவா, என்பவர்களோடு பலர் திரும்பி வந்தனர்.

எஸ்றா 3:2 யோசுதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், தேவனின் பலிபீடம் கட்டினர்.

எனவே அந்த 2 பேர் யோசுவா, செருபாபேல்.

**ஆ)** 1 இராஜா. 19:19 எலியா, எலிசாவின் மேல் தன் சால்வையைப் போட்டான்.

2 இராஜா. 2:9 எலிசா : உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் கிடைக்கம்படி வேண்டுகிறேன் என்றார்.

எனவே அந்த 2 பேர் எலியா, எலிசா என்ற தீர்க்கதரிசிகள்.

**இ)** உடல் மரித்து, அடக்கம் பண்ணப்படாமல் உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் இருவர்.

ஆதி. 5:24 ஏனோக்கு, தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான், தேவன் அவனை எடுத்துக்கொண்டார். யூதா 14,15 படி ஏனோக் ஒரு தீர்க்கதரிசி. 2 இராஜா. 2:11 (எலியா, எலிசா) பேசிக்கொண்டு நடந்து போகையில் அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழற்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். எனவே அந்த 2 பேர் ஏனோக்கும் எலியாவும் தான்.

**ஈ)** 4:15 நான் உன் (மோசே) வாயிலும், அவன் (ஆரோன்) வாயிலும் இருந்து, நீங்கள் செய்ய வேண்டியதை உணர்த்துவேன்.

மோசேயும் ஆரோனும் எகிப்தில் பல அற்புதங்களை, அதிசயங்களை செய்து காட்டினர், எகிப்திலிருந்து இஸ்ரவேலரை அழைத்து வந்தனர்.

எனவே அந்த 2 பேர் மோசேயும் ஆரோனும்.

**உ)** சங். 105:5 அவருடைய தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே. எனவே அந்த 2 பேர் ஆபிரகாமும், யாக்கோபும்.

**ஊ)** மத். 17:3 மோசேயும் எலியாவும் (இயேசுவோடு) பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள், எனவே அந்த 2 பேர் மோசேயும் எலியாவும்.

## ஈ) இயேசுவின் அபிஷேகம்

மூன்று அபிஷேகங்களைப் பெற்றவர் – ஆசாரிய அபிஷேகம், ராஜ அபிஷேகம், தீர்க்கதரிசன அபிஷேகம்.

இயேசு என்பதன் அர்த்தம் இரட்சகர் (மத். 1:21) யோசுவா என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படுகிறது, கிரேக்க பாஷையில் கிறிஸ்து என்றால், அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம், எபிரேய பாஷையில் மேசியா என்று சொல்லப்படுகிறது.

இயேசு கிறிஸ்து என்றால், யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியாவாகிய இரட்சகர் என்பதாகும், (அபிஷேகம் பண்ணப்பட்ட) மேசியா என்றால், எதிர்பார்த்திருக்கும் ராஜா, அந்நியரின் நுகத்தடிகளை அகற்றி விடுவிப்பவர், முழு உலகத்தையும் அரசாளுபவர்.

மேசியா என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் தானி. 9:25, 26–ல் வருகிறது, ஆதி. 3:15 / 49:10, எண். 24:17 / உபா. 18:18, ஏசா. 53, சங். 2, 16, 22, 40, 110ல் மேசியா என்ற பெயர் இல்லை, ஆனால் அவை மேசியாவைக் குறிக்கின்றன என நம்பினர்.

## புதிய ஏற்பாட்டில்

யோவா. 1:41 மேசியாவைக் கண்டோம், மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம்.

யோவா. 4:25 கிறிஸ்து எனப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன்.

## முன் கூறப்பட்டது

1 சாமு. 2:10 தாம் அபிஷேகம் பண்ணினவரின் (இயேசு) கொம்பை (வல்லமையை) உயரப்பண்ணுவார்.

1 சாமு. 2:35 என் உள்ளத்திற்கும், சித்தத்திற்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை (தாவீது) எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டை கட்டுவேன், அவன் என்னால் அபிஷேகம் பண்ணப்பட்டவரும் (இயேசு) முன்பாக சகல நாளும் நடந்து கொள்வான்.

சங். 2:2 கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு (இயேசு) பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணினர், அப். 4:25–28ல் பேதுரு சங். 2:1, 2ஐ மேற்கோளாக காட்டி விளக்குவதைக் காண்க.

சங். 45:7 உம்முடைய தேவன், உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை (இயேசுவை) ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினர், எபி. 1:8, 9ல் மேற்கோளாக காட்டுகிறார்.

சங். 84:9 நீர் அபிஷேகம் பண்ணினவரின் (இயேசு) முகத்தைப் பாரும் ஏசா. 53:2 அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது (மத். 26:67 மா. 14:65) லூ. 22:64.

சங். 89:50 நீர் அபிஷேகம் பண்ணினவரின் காலடிகளையும் நிந்திக்கிறார்கள் (மத். 27:40 மா. 15:29, 30)

சங். 132:17 (சீயோனில்) தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப் பண்ணுவேன், நான் அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம் பண்ணினேன்.

ஏசா. 61:1–4 வாசித்துப் பாருங்கள் இயேசுவைப் பற்றியவை

லூ. 4:18–21 வாசித்துப் பாருங்கள் இயேசு சொன்னார், உங்கள் காதுகள் கேட்க இந்த வேத வாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று.

தானி. 9:24 மகா பரிசுத்தமுள்ளவரை (இயேசு) அபிஷேகம் பண்ண அப். 10:38 பேதுரு நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்.

## 1.4 அபிஷேகிக்க பயன்படுத்தப்பட்டவை யாவை? எதனால் அபிஷேகித்தனர்? எப்படி அபிஷேகித்தனர்?

### 1. எண்ணை

ஆதி. 28:18 அதிகாலையில் யாக்கோபு எழுந்து தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி அதன்மேல் எண்ணை வார்த்தான்.

ஆதி. 31:13 நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே.

ஆதி. 35:14 யாக்கோபு, தன்னோடே அவர் பேசின ஸ்தலத்திலே ஒரு கற்றூணை நிறுத்தி அதின் மேல் பான பலியை ஊற்றி, எண்ணையையும் வார்த்தான்.

சங். 23:5 தாவீது என் தலையை எண்ணையால் அபிஷேகம் பண்ணுகிறீர் சங். 92:10 சங்கீதக்காரன் புது எண்ணையில் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்.

எண்ணை பூசி காயங்களை ஆற்றுதல், நோய்களை சுகமாக்குதல் அபிஷேகத்தின் முக்கிய பங்கு.

ஏசா. 1:6 உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை, அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது, அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டபடாமலும் எண்ணையினால் ஆற்றப்படாமலிருக்கிறது ஏன்? (வசனம் 4) பாவமுள்ள ஜாதி, அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனம், பொல்லாதவர்களின் சந்ததி, கேடு உண்டாக்குகிற புத்திரர், பின்வாங்கிப் போனவர்கள்.

இயேசு 12 சீடர்களுக்கும் அதிகாரம் கொடுத்தார், மா. 6:13 அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணை பூசிக் சொஸ்தமாக்கினர், அதை யாக்கோபு விளக்கி கூறுகிறார் யாக். 5:14–16ல் கள்ளர் கையில் அகப்பட்டு, காயப்பட்டு, குற்றுயிராகக் கிடந்த மனிதனின் காயங்களில் எண்ணை வார்த்தான் சமாரியன். (லூக். 10:34).

## 2. அபிஷேகத் தைலம்

யாத். 30:23–35 அபிஷேகத்தைலம் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது.

சங். 45:7 (எபி. 1:9)ல் ஆனந்த தைலம் எனக் கூறப்பட்டுள்ளது

சங். 133:2 நல்ல தைலம் எனக் கூறப்பட்டுள்ளது

லூக். 7:37ல் பரிமள தைலம் எனக் கூறப்பட்டுள்ளது

யாத். 30:26–28 (மோசே அபிஷேக தைலத்தால்)ஆசரிப்பு கூடாரம், சாட்சி பெட்டி, மேஜை, அதின் பணி முட்டுகள், குத்துவிளக்கு அதின் கருவிகள், தூப பீடம், தகன பலி பீடம், அதின் பணி முட்டுகள், தொட்டியை அபிஷேகித்தான்.

யாத். 29:21 (மோசே அபிஷேக தைலத்தால்) ஆரோனும் அவன் வஸ்திரங்களும், அவனுடைய (4) குமாரரையும், அவர்கள் வஸ்திரங்களையும் அபிஷேகித்தான்.

1 சாமு. 10:1 சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, சவுலின் தலையின்மேல் வார்த்தான்.

1 சாமு. 16:13 சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து, தாவீதை அபிஷேகம் செய்தான்.

2 இராஜா. 9:3 எலிசா அனுப்பிய தீர்க்க தரிசகளின் புத்திரரில் ஒருவன், தைலக் குப்பியை எடுத்து, யெகூ தலையின் மேல் வார்த்து அபிஷேகம் பண்ணினான்.

1 இராஜா. 1:39 ஆசாரியனாகிய சாதோக்கு, தைலக் கொம்பை கொண்டு போய், சாலொமோனை அபிஷேகித்தான்.

### 3. சாட்சி ஆகமத்தைக் கொடுத்து

2 இராஜா. 11:12 ஆசாரியன் யோய்தா, யோவாசின் தலையில் கிரீடத்தை வைத்து, ஆகமத்தை, கையிலே கொடுத்து, ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணினான்.

### 4. சால்வையை போட்டு

1 இராஜா. 19:19 எலியா, எலிசாவின் மேல் சால்வையைப் போட்டபின் 2 இராஜா. 2:9 எலிசா எலியாவிடம் உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்.

1 இராஜா. 2:14 எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தவுடன் அது இருபக்கமாக பிரிந்தது.

## 5. பரிசுத்த ஆவி, அவரது வல்லமை

க்) அப். 10:38 நசரேனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்.

ங்) பேதுரு அப். 10:34–43ல் இயேசுவை உயர்த்திப்பேசினார் அதைக் கேட்டுக்கொண்டிருந்த கொர்னேலியு வீட்டார் அபிஷேகிக்கப்பட்டனர்.

ச்) பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டவர்கள், ஜெபித்து கைகளை வைக்கும்போது.

அப். 8:14–17 பேதுரு, யோவான், சமாரியர் வேத வசனத்தை ஏற்றுக்கொண்டதை கேள்விப்பட்டு அங்கு சென்றபோது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறாமல் இருப்பதைக் கண்டனர்.

அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி, அவர்களுக்காக ஜெபித்து, கைகளை வைத்தார்கள், சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள், அப். 9:17 அனனியா சவுலின்மேல் கையை வைத்து சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமாகிய இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்று ஜெபித்தபோது சவுல் அபிஷேகிக்கப்பட்டார்.

அப். 19:6 பவுல் எபேசியர் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்.

2 தீமோ. 1:6 நான் (பவுல்) உன்மேல் (தீமோத்தேயு) என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.

## 1.5 யார் மூலம் அபிஷேகம் கொடுக்கப்பட்டது? யாருக்கு கொடுக்கப்பட்டது?

2 கொரி. 1:21 நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே, தேவன் மனிதர்கள் மூலம் பேசி, மற்ற மனிதர்களுக்கு அபிஷேகம் கொடுக்கச் சொன்னார்.

1. யாத். 28:41 / 30:30 / 40:13–15 மோசே மூலம் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும்

2. 1 சாமு. 10:1 / 15:1 சாமுவேல் மூலம் சவுலுக்கு

3. 1 சாமு. 16:13 சாமுவேல் மூலம் தாவீதுக்கு
   2 சாமு. 2:4 யூதா மனுஷர் மூலம் தாவீதுக்கு
   2 சாமு. 5:3 இஸ்ரவேல் மனுஷர் மூலம் தாவீதுக்கு

4. 2 இராஜா. 1:34 சாதோக், நாத்தான் மூலம் சாலொமோனுக்கு

5. 2 இராஜா. 9:3 எலிசா அனுப்பிய தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் யெகூவை

6. 2 இராஜா. 11:12 ஆசாரியன் யோய்தா, யோவாசுக்கு

7. சொ. 45:1 கர்த்தராகிய நான் கோரேசுக்கு

8. 1 இராஜா. 19:19 எலியா மூலம் எலிசாவுக்கு

9. அப். 1:38 தேவன் இயேசுவுக்கு

10. அப். 8:16,17 பேதுரு, யோவான் மூலம் சமாரியருக்கு

11. அப். 9:17 அனனியா மூலம் சவுலுக்கு

12. அப். 19:6 பவுல் மூலம் எபேசியருக்கு

13. 2 தீமோ. 1:6 பவுல் மூலம் தீமோத்தேயுவுக்கு

14. அப். 10:43, 44 பேதுரு மூலம் கொர்நேலியுவீட்டாருக்கு

15. 1 யோ. 2:20, 27 பரிசுத்தரால் விசுவாசிகளுக்கு

16. இயேசுவுக்கு மனிதர்களது அபிஷேகம்.

லூ. 7:36–50 வாசிக்க இயேசு பரிசேயன் சீமோன் வீட்டில் இருந்தபோது பாவியாகிய ஸ்திரீ (யோவா. 11:2 கர்த்தருக்கு பரிமளத்தைலம் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே) ஒரு பரணியில் பரிமள தைல் கொண்டு வந்து, இயேசுவின் பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து தலை மயிரினால் துடைத்து, பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்.

மத். 26:6–13 மா. 14:3–9 யோவா. 12:1–8

ஒரு ஸ்திரீ பரிமளத்தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியிலுள்ள தைலத்தை இயேசுவின் சிரசின் மேல் ஊற்றினாள் இயேசு இவள் இந்த தைலத்தை ஊற்றியது, என் சரீரத்தை அடக்கம் பண்ண எத்தனமான செய்கை என்றார், பஸ்கா பண்டிகை வர 6 நாளைக்கு முன்னே இது நடந்தது.

## 1.6 பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றால் என்ன?

**பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுதல், (நிரப்பப்படுதல்) (முத்திரைப் போடப்படுதல்) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் முன் கூறப்பட்டது.**

ஏசா. 28:11–ல் கூறப்பட்டது அப். 2:1–11ல் நிறைவேறியது

ஏசா. 61:1–4ல் கூறப்பட்டது லூ. 4:18–21ல் நிறைவேறியது

யோவே. 2:28, 29ல் கூறப்பட்டது அப். 2:16–18ல் நிறைவேறியது

**யோவான் ஸ்நானன் சொன்னார்**

மத். 3:11 (மா. 1:8) (லூ. 3:16) (யோவா. 1:33) அவர் (இயேசு) பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

அப். 2:1–11 / 8:16, 17 சமாரியர் பேதுரு யோவான் மூலம்

120 பேர் 9:17 சவுலுக்கு அனனியா மூலம் பெற்றது

10:44 கொர்நேலியு வீட்டார் பேதுரு மூலம்

19:6 எபேசியர் சவுல் மூலம் பெற்றது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்.

அப். 2:3 அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது, இது அக்கினி ஞானஸ்நானம்.

## 1.7 அபிஷேகம் ஏன் கொடுக்கப்பட்டது.

### 1. ஆசாரிய அபிஷேகம் ஏன் கொடுக்கப்பட்டது?

யாத். 28:41 கர்த்தர் மோசேயிடம் ஆரோனையும், அவன் குமாரர்களையும் ஆசாரிய ஊழியம் செய்ய பரிசுத்தப்படுத்து என்றார், பாவங்களுக்காக, காணிக்கை பலி செலுத்த (எபி. 5:1) நிற்பது ஆசாரிய ஊழியர் வேலை ஆசாரியனது பாவத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் (லேவி. 4:3–12) சபையாரது பாவ நிவர்த்தி செய்ய வேண்டும் (லேவி. 4:3–21 எண். 15:22–26) பிரபுவின் பாவத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் (லேவி. 4:22–26) ஜனங்களின் பாவத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் (லேவி. 4:27–35 எண். 15:22–26) கர்த்தருக்குரிய பரிசுத்தமான்களில் குற்றம் செய்தால் அந்த பாவத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் (லேவி. 5:15–19)

பிரதான ஆசாரியனின் கடமை லேவியர்களது வேலையை மேற்பார்த்தல் (எண். 4:16)

கோகாத்திய லேவியரது பணிவிடை (எண். 4:4–15)

கொர்சோன் லேவியரது பணிவிடை (எண். 21:28)

மெராரி லேவியரது பணிவிடை (எண். 29:33)

ஆசரிப்பு கூடாரத்தை காவல் காத்தல் (எண். 18:5)

ஆசரிப்பு கூடாரத்தில் விளக்கு ஏற்ற (எண். 8:3)

யாத். 30:7 1 நா. 6:49 படி தூபங்காட்டுதல் (வெளி. 8:3 ஜெபித்தல்)

## 2. ராஜா அபிஷேகம் ஏன்?

நியா. 9:9 மக்களை அரசாளுதல் நல்ல வழியிலே நடத்துதல்.

கர்த்தர், சவுல் வர ஒரு நாளைக்கு முன்னே, சாமுவேல் காது கேட்கச் சொன்னார், சவுலை என் ஜனமாகிய இஸ்ரவேலரின் மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணு, அவன் என் ஜனத்தை பெலிஸ்தரின் கைக்கு நீங்களாக்கி இரட்சிப்பான் (1 சாமு. 9:15, 16)

சாமுவேல் தாவீதை அபிஷேகம் பண்ணின நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார், தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது சுர மண்டலத்தை வாசிப்பான், அதினாலே பொல்லாத ஆவி, சவுலை, விட்டு நீங்க சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமானான் (1 சாமு. 16:13, 23)

தாவீது ஆடுகளை மேய்த்தபோது, ஒரு விசை சிங்கமும், இன்னொரு தடவை கரடியும், வந்து மந்தையிலிருக்கிற ஆட்டைப் பிடித்தபோது, அவற்றை அடித்துக் கொன்று ஆடுகளை தப்புவித்தான், சிங்கம், கரடியை (பிசாசை) எதிர்க்கும் தைரியம், கோலியாத்தை எதிர்க்கும் தைரியம் வந்தது. (1 சாமு. 17:34–37)

நீ நிந்தித்த இஸ்ரவேலருடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் வருகிறேன், கர்த்தர், உன்னை என் கையில் ஒப்புக் கொடுப்பார், அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்வார்கள், கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல, யுத்தம் கர்த்தருடையது, அவர் உங்களை எங்களை கையில் ஒப்புக்கொடுப்பார். (1 சாமு. 17:46,47) என்ற விசுவாச வார்த்தைகளைப் பேசினான்.

கர்த்தர் அளித்த ரட்சிப்பை தாவீது உரைத்து (1 நாளா. 11:141, 2 சாமு. 22:51 (சங். 18:50)ல் ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளித்து, அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும், அவன் சந்ததிக்கும் சதா காலமும், கிருபை செய்கிறார் என்று பாடினார். சங். 20:6 கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணின வரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன், தமது வலது கரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார்.

சங். 28:8 தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர் (1 நாளா. 11:9 / 18:13) 2 சாமு. 23:1 மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய் பாடினான். சங்கீதம் பாடி தேவனைத் துதித்தார்.

யெகூவுக்கு, கர்த்தர் எலிசா மூலம் தெளிவாகச் சொன்னான், என் ஊழியக் காரராகிய தீர்க்க தரிசிகளின் இரத்தப் பழியையும், கர்த்தருடைய சகல ஊழியக்காரரின் இரத்தப் பழியையும் யேசபேலின் கையில் வாங்கும்படி ஆகாபின் குடும்பத்தை அழித்துவிடக் கடவாய் (2 இராஜா. 9:7)

கர்த்தர் எலியாவிடம், ஆசகேலின் பட்டயத்திற்கு தப்பினவனை யெகூ கொன்று போடுவான், யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான் (1 இராஜா. 19:17)

2 நாளா. 22:7 கர்த்தர், ஆகாபின் குடும்பத்தாரை சங்கரிக்க அபிஷேகம் பண்ணுவித்த யெகூ.

2 இராஜா. 9:14 முதல் 10:28 யெகூ நிறைவேற்றினான்.

கர்த்தர் எலியாவிடம் ஆசகேலை சீரியாவின் மேல் ராஜாவாக அபிஷேகம் செய்யச் சொன்னார், ஆசகேல், இஸ்ரவேலரை அழிக்க (1 இராஜா. 19:17) இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்வான் என்பதனை எலிசா அறிந்தார் (2 இராஜா. 8:12) அவையாவும் 2 இராஜா. 10:32, 33 / 12:17, 18 /13:3 22ல் நிறைவேறியது.

கோரேஸூக்கு கர்த்தர் கொடுத்த அபிஷேக நோக்கம் ஏசா. 45:1 ஜாதிகளை கீழ்படுத்த ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்க – கோரேசுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளை திறந்து வைக்கச் செய்வேன்.

## கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தம்.

ஏசா. 45:2 நான் உனக்கு முன்னே போவேன், கோணலானவைகளை செவ்வையாக்குவேன், ஏசா. 11:4 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் கொடுப்பேன். 2 நாளா. 36:22, 23 எஸ்றா 1:1–3ல் நிறைவேறியது.

பாபிலோனிய பொக்கிஷ அறை வெண்கலக் கதவுகளால் ஆனது, இருப்புத் தாழ்பாள்களை உடையது, 2 இராஜா. 13:25 :13–17ல் எடுத்துச் சென்ற அத்தனையையும் அங்கு நேபுகாத்நேச்சார் வைத்தான். ஒளிப்பிடத்தில் இருந்தவற்றை, இஸ்ரவேலருக்கு சொந்தமானதை திருப்பிக் கொடுத்தான்.

## 3. தீர்க்க தரிசன அபிஷேகம் ஏன்?

### a. பின்னால் நடக்க போவதை முன்னதாக அறிவித்தல்

1. 2 இராஜா. 4:16 சூனேமியாள் குழந்தை பெறுவாள், வ 17ல் நிறைவேறியது

2. 2 இராஜா. 7:1 ஒரு மரக்கால் கோதுமை மா 1 சேக்கல்

2 இராஜா. 4:16 2 மரக்கால் வாற்கோதுமை 1 சேக்கல் விற்கப்படும் (பஞ்ச காலத்தில் சொன்னார்) (வசனம் 16ல் நிறைவேறியது)

3. 2 இராஜா. 7:2 விசுவாசியாத பிரதானிக்கு : கண்களில் காண்பாய் சாப்பிட மாட்டாய் வ 17ல் நிறைவேறியது.

4. 2 இராஜா. 8:1 7 வருட பஞ்சம் வ 3ல் நிறைவேறியது

5. 2 இராஜா. 7:15 ஆசகேலின் கொடூரம்

6. 2 இராஜா. 10:32, 33 / 12:17,18 / 13:3, 32ல் நிறைவேறியது

7. 2 இராஜா. 13:14–19 சீரியரை 3 முறை முறியடிப்பீர் வ 25–ல் நிறைவேறியது.

## b. புத்தி சொல்லி திடப்படுத்துதல்

2 இராஜா. 4:1 இறந்த தீர்க்கதரிசியின் மனைவியை

2 இராஜா. 4:16 குழந்தை இல்லாமலிருந்த சூனேமியாளுக்கு

2 இராஜா. 4:27 இறந்துபோன குழந்தைக்கு உயிர் தந்து

## c. அதிசயங்கள் செய்தல்

2 இராஜா. 2:4 யோர்தானை பிரித்தது

2 இராஜா. 19:22 கெட்ட தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றியது

2 இராஜா. 4:1–7 விதவையின் எண்ணை பெருகியது.

2 இராஜா. 18:37 சூனேமியாளின் இறந்த மகனை உயிர்ப்பித்தது

2 இராஜா. 38:41 உணவிலிருந்து விஷத்தை அகற்றியது

2 இராஜா. 42:44 அப்பம் பெருகியது

2 இராஜா. 5:1–19 நாகமான் குஷ்டம் நீங்கியது

2 இராஜா. 26,27 கேயாசிக்கு குஷ்டம் வந்தது

2 இராஜா. 6:6 கோடாரி நீரில் மிதந்தது

2 இராஜா. 8:2 சீரியா ராஜாவின் திட்டத்தை வெளிப்படுத்தியது

2 இராஜா. 13:17 வேலைக்காரன் மனக்கண்களை திறந்தது.

2 இராஜா. 18:23 சீரிய படைகளுக்கு கண் மயக்கம்.

**பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஏன்?**

ஏசா. 61:1 சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயங்கட்ட சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக்கூற

கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்தலைக் கூற.

ஏசா. 61:2 கர்த்தரது அனுக்கிரக வருஷத்தைக் கூற நம்முடையதேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளைக் கூற துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய.

ஏசா. 61:3 சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்படுத்த சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரம் தர துயரத்திற்குப்ப பதிலாக ஆனந்த தைலம் தர ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடை தர.

எசே. 28:14 நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட கேரூப் (சாத்தான்).

தானி. 9:24 மீறுதலைத்தவிர்க்க பாவங்களைத் தொலைக்க அக்கிரமத்தை நிவர்த்தி செய்ய நித்திய நீதியை வருவிக்க தரிசனத்தை முத்திரிக்க தீர்க்க தரிசனத்தை முத்திரிக்க (மகா பரிசுத்தமுள்ளவர் இயேசுவுக்கு மட்டுமே பொருந்தும்).

ஆப. 3:13 உமது ஜனத்தின் இரட்சிப்புக்காக நீர் அபிஷேகம் பண்ணுவித்தவன்.

சக. 4:14 ஆண்டவரின் சமூகத்தில் நிற்க – ஜெபிக்க, துதிக்க.

அப். 1:8 பெலனடைய சாட்சிகளாயிருக்க.

அப். 10:38 நன்மை செய்ய பிசாசின் பிடியிலிருப்பவர்களை மீட்க.

## 1.8 யாருக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம்?

**பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறுவது எப்படி?**

முதலாவது தாகம் (விசுவாசம்) வேண்டும், இயேசுவே உலக இரட்சகர், மன்னுயிர்க்காக தன்னுயிரை ஈந்தவர், உயிர்த்தெழுந்தவர், ஜீவ தண்ணீர் ஊற்று

(எரே. 2:13) 17:13 என்று விசுவாசிக்க வேண்டும், அப்பொழுது ஜீவ தண்ணீர் (பரிசுத்த ஆவி) புறப்பட்டுவருவார், ஜீவ நதியாக ஊற்றுத் தண்ணீரே பொங்கி வா (எண். 21:17) என்ற விசுவாசம் வேண்டும்.

யோவே. 3:18 ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்படும் எசே. 47:1–12 வாசிக்க இயேசுவை விசுவாசியாதவனுக்கு பரிசுத்த ஆவி இல்லை.

சக. 13:1 அந்நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும், அந்த ஊற்று சிலுவையிலிருந்து புறப்பட்டது.

யோவா. 19:34 போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான், உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும் (1 யோவா. 1:7) என்று விசுவாசிக்க வேண்டும்.

இயேசு சொன்னார்

யோவா. 4:14 சமாரிய ஸ்திரீயிடம்

யோவா. 6:35 இயேசு அவர்களை நோக்கி : ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

யோவா. 7:37, 39 பண்டிகை நாளில் ஜனங்களிடம்

வெளி. 21:6 தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய் கொடுப்பேன் (வெளி. 22:17)

தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், (பரிசுத்த ஆவி) வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததி மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசா. 44:3) என்பது வாக்குத்தத்தம்.

ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் (ஏசா. 55:1) என்ற அழைப்பைக் கேட்டு, வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்.

ஏசா. 41:17 / 44:3 உமத பேரின்ப நதியினால் அவர்கள தாகத்தைக் தீர்க்கிறீர் (சங். 36:8) - என் ஆத்துமாவின் மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது" (சங். 63:1 / 143:6) என்று தாவீதைப் போல தாகமாயிருக்க வேண்டும்.

மத். 11:28–30 இயேசு அழைக்கிறார்

இரண்டாவது கேட்க வேண்டும், லூ. 11:9 – 13ஐ வாசித்துப் பாருங்கள் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது மிக நிச்சயமல்லவா?

120 பேர் கூடியிருந்து ஒரு மனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தபோது தானே பரிசுத்த ஆவி பொழியப்பட்டார். (அப். 1:14, 15/2:1)

ஆவியின் வரம் இரட்டிப்பாக வேண்டும் என்று கேட்ட எலிசா, எலியா கில்காலிருந்து பெத்தேலுக்கும், எரிகோவுக்கும், யோர்தானுக்கும் சென்றபோது விடாப்பிடியாகச் சென்றதனால்தானே பெற்றவர்.

மூன்றாவதாக, தேவனை உயர்த்திப் பேசுபவர்களது பேச்சைக் கேட்ட கொர்நேலியு போன்ற நல்லவரது வீட்டார் மீது பரிசுத்த ஆவி பொழியப்பட்டது, (அப் 10:34–45) நல்லவர்களாக வாழ்ந்தால்தான் வல்லவரது ஆவியைப் பெற முடியும், தேவன் பரிசுத்தர், இயேசு பரிசுத்தர், பரிசுத்த ஆவி பரிசுத்தர், விசுவாசத்தால் இயேசு நம்மில் வாசமாயிருக்கவும் (எபே. 3:17) தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருக்கவும் (1 கொரி. 3:16) நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமல்லவா? நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள் (லேவி. 11:45) என்றபடி பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும்.

நான்காவதாக அபிஷேகம் பெற்ற பரிசுத்தவான்கள் நம் தலையில் கைகளை வைத்து ஜெபிப்பதால் உற்ா. 34:7 மோசே, யோசுவா தலையில் வைத்ததால் அப். 8:16, 17 பேதுரு, யோவான் சமாரியர்களுக்கு அப். 9:17 அனனியா சவுலுக்கு (பவுல்) அப். 19:5, 6 பவுல் எபேசு விசுவாசிகளுக்கு 2 தி 1:6 பவுல் தீமோத்தேயுவுக்கு.

கடைசியாக நாள்தோறும் நிரப்பப்பட வேண்டும், பவுல் தீமோத்தேயுவுக்கு, நீ அனல் மூட்டி எழுப்பிவிடு 2 தீமோ. 1:6 என்றார்.

## 1.9 அபிஷேகம் பெறுபவர்களுக்கு கர்த்தர் செய்வது என்ன?

1 சாமு. 2:10 தாம் அபிஷேகம் பண்ணினவரின் கொம்பை (வல்லமையை) உயரப்பண்ணுவார் என அன்னாள் துதித்தாள்.

2 சாமு. 22:51 (சங். 18:50) தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதா காலமும் கிருபை செய்கிறார் என்றார் தாவீது.

(சங். 20:6 கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதனை இப்பொழுது அறிந்திருக்கிறேன், தமது வலது கரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார் என்றார் தாவீது.

சங். 28:8ல் அவரே தாம் அபிஷேகம் பண்ணினவர்களுக்கு அரணான அடைக்கலமானவர் என்றார் தாவீது.

2 நாளா. 6:42 நீர் அபிஷேகம் பண்ணினவனின் முகத்தைப் புறக்கணியாமல், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கிருபைகளை நினைத்தருளும் என்றார் சாலொமோன்.

சங்கீதக்காரன், சங். 132:10ல் நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் முகத்தை, உமது தாசனாகிய தாவீதினிமித்தம் புறக்கணியாதிரும் என்றும், வசனம் 17ல் நான் அபிஷேகம் பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை (இயேசு) ஆயத்தம் பண்ணினேன் என்றும் கூறினார்.

ஜெப ஆலயத்தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும் அதிகார முள்ளவர்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்போது, எப்படி என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைபடாதிருங்கள், நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் (லூ. 12:11, 12) என்றார் இயேசு.

மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1 கொரி. 2:13) என்றார் பவுல்.

அந்த அபிஷேகம், சகலத்தையும் குறித்து, உங்களுக்கு போதிக்கிறது (1 யோவா. 2:27) என்றார் யோவான்.

## 1.10 பரிசுத்த ஆவியை பெற்றவர்கள், நிரப்பப்பட்டவர்கள் யார்?

ஆதி. 41:38 தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல் (யோசேப்பு) வேறொருவன் உண்டோ?

1. யாத். 31:5 ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு (பெசலெயேல் யாத். 31:2) உண்டாக தேவ ஆவியால் நிரப்பினேன்.
2. யாத். 35:33 அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும் அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினால் நிரப்பினார்.
3. எண். 11:17 உன் மேல் (மோசே) இருக்கிற ஆவியை அவர்கள் (70 பேர்) வைப்பேன்.
4. எண். 11:25 அவன் மேலிருந்த ஆவியை, 70 பேர் மேல் வைத்தார்.
5. எண். 14:24 என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவன்.
6. எண். 24:2 தேவ ஆவி அவன் (பிலேயாம்) மேல் வந்தது.

7. எண். 27:18 ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா உபா. 34:5 மோசே, நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால், அவன் ஞானத்தின் ஆவியினால் நிறைப்பட்டான்.

8. நியா. 3:10 அவன் (ஒத்னியேல்) மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்தது.

9. நியா. 6:34 அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினார்.

10. நியா. 11:29 அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின் மேல் இறங்கினார்.

11. நியா. 13:25 கர்த்தருடைய ஆவியானவர் அவனை (சிம்சோன்) ஏவத் துவங்கினர்.

    நியா. 14:6, 19 / 15:14 கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினார்,

12. 1 சாமு. 16:13 அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார், 2 சாமு. 23:2 கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்.

13. சங். 51:10 நிலைவரமான ஆவியை உன் உள்ளத்திலே புதுப்பியும்

14. சங். 51:11 உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளாமலிரும்.

15. சங். 51:12 உற்சாகஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

16. சங். 139:7–12 ஆவிக்கு மறைவாக எங்கும் செல்ல முடியாது

17. சங். 143:10 உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக.

18. 1 சாமு. 19:20, 21 சவுலினுடைய சேவகர் மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

19. 1 இராஜா. 22:24 (2 நாளா. 18:23) சிதேக்கியா மிகாயாவின் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி, எந்த வழியாய், என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது?

20. 2 இராஜா. 2:15, எலியாவின் ஆவி எலிசா மீது இறங்கியிருக்கிறது

21. 1 நாளா. 12:18, அமாசாயின் மேல் ஆவி இறங்கினது

22. 1 நாளா. 15:1, தேவனுடைய ஆவி அசரியா மேல் இறங்கினது

23. 1 நாளா. 20:14, யகாசியேல் மேல் மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினது

24. 1 நாளா. 24:20, தேவனுடைய ஆவி, சகரியா மேல் இறங்கினது

25. எசே. 2:2 / 3:24 / 11:5 கர்த்தரது ஆவி என் மேல் (எசேக்கியேல்) இறங்கினார்.

26. எசே. 3:12, 14 / 8:3 / 11:1, 24 ஆவியானவர் உயரே எழுந்தார்

27. எசே. 11:19 / 18:31 / 36:26 புதிய ஆவியை வைப்பேன்

28. தானி. 4:8 பரிசுத்த தேவர்களுடைய ஆவியையுடைய தானியேல் என்னிடத்தில் கொண்டு வரப்பட்டான்.

29. தானி. 4:9, 18 பரிசுத்த தேவர்களுடைய ஆவி உன்னில் இருக்கிறது

30. தானி. 5:11 அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது.

31. தானி. 5:12 கருகலானவைகளைத் தெளிவிக்கிறதுமான அறிவும், புத்தியும், விசேஷித்த ஆவியும் உனக்கு உண்டு.

32. தானி. 14 உனக்குள்ளே தேவர்களுடைய ஆவி உண்டு.

33. தானி. 6:3 தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது.

**34.** மீகா. 3:8 நானே (மீகா) யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்.

சிலர் மேல் தேவ ஆவி இறங்கினது, கர்த்தருடைய ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டார், என வேதாகமத்தில் இல்லை ஆனால் அவர்களிடமிருந்து பிறர் ஆவியைப் பெற்றனர், அபிஷேகம் பெற்றனர், கர்த்தர் சொன்ன வார்த்தைகளை மட்டுமே சொன்னார்கள் ஆவி பற்றி பேசினர்.

1. 1 சாமு. 3:1–21 / 10:1 / 16:13 சாமுவேல்
2. 1 இராஜா. 18:12 ஒபதியா
3. 2 இராஜா. 2:16 தீர்க்க தரிசிகளின் புத்திரர்
4. நெகே. 9:20 நெகேமியா
5. யோபு 19:25, 27, 26:13 யோபு
6. யோபு 33:4 எலிகூ
7. ஏசா. 11:2 / 28:6 / 32:15 / 35:1–10 / 40:7, 13 / 42:1 44:3 / 59; 19,21 / 61:1 / 63:10, 12, 14 ஏசாயா
8. புல. 4:20 எரேமியா
9. யோவே. 2:28, 29 யோவேல்
10. ஆப. 3:13 ஆபகூக்
11. ஓசியா, ஆமோஸ், ஒபதியா, யோனா, நாகூம், செப்பனியா போன்ற தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்தனர்.
12. ஆகா. 2:5 ஆகாய்
13. சக. 4:6 / 12:10 சகரியா

14. மல். 2:15 மல்கியா

### ஆவி பற்றிச் சொன்ன புற ஜாதியினர்

1. ஆதி. 41:38 பார்வோன் எகிப்து ராஜா
2. தானி. 4:8, 9, 18 நேபுகாத்நேச்சார் – பாபிலோன் ராஜா
3. தானி. 5:11, 12 ராஜாத்தி நேபுகாத்நேச்சாரின் மகள் பெல்ஷாத்சாரின் மனைவி
4. தானி. 5:14 பெல்ஷாத்சார் – பாபிலோன் ராஜா
5. தானி. 6:3 தரியு மேதிய ராஜா

## 1.11 அபிஷேகம் பெற்றதன் அடையாளம் என்ன?

### 1. அந்நிய பாஷையில் பேசுதல்

ஏசா. 28:11ல் முன் கூறப்பட்டது – அந்நிய பாஷையினால் பேசுபவர்கள்

மா. 16:17ல் இயேசு சொன்னார் – நவமான பாஷைகளை பேசுவார்கள்

அப். 2:4 / 10:44, 45 / 19:6ல் நிறைவேறியது.

### 2. வேதவசனத்தின் மீது ஆவல்

சங். 119:97 உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன் நாள் முழுவதும் அது என் தியானம்.

### 3. பிறருக்காக ஜெபிக்கும் ஆசை

எசே. 22:30 நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனைத் (சங். 106:23) அறிவால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலே நின்றான்) தேடினேன், ஒருவனையும் காணேன், அந்த ஒருவனாக நான் இருக்கிறேன் என

உலக நாடுகள், மக்கள், ஜாதிகள், பாஷைக்காரர், பாவிகள், அக்கிரமக்காரர், அநியாயக்காரர் இரட்சிக்கப்பட ஜெபிப்பார்.

**4. தேவனை துதித்தல், (புகழுதல்) ஸ்தோத்தரித்தல் (நன்றி சொல்லுதல்)**

சங். 119:164 உமது நீதி நியாயங்களினிமித்தம், ஒரு நாளில் தாம் உம்மைத் துதிக்கிறேன் (3, 6, 9, 12, 15, 18, 21 மணி)

**5. ஊழியம் செய்ய வாஞ்சை**

வேதத்தை கையிலெடுத்துச் செல்ல – வெட்கப்படாமல் இயேசு பற்றி சொல்ல.

**6. ஆலயம் செல்லும் ஆசை**

சங். 42:1 மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கூறுவது போல, தேவனே,

என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கூறுகிறது என் ஆத்துமா, தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது, நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?

**7. கலா. 5:22,23–ல் உள்ள ஆவியின் கனி வெளிப்படும்,**

**8. 1 கொரி. 12:8–10 ஆவியின் வரங்கள் இருக்கும்.**

**9. எசே. 11:19 / 18–31 / 36: 26, 27 கல்லான இதயம் மாறி சதையான இருதயம் பரிசுத்த வாழ்வு.**

## 1.12 ஒரு விசுவாசி என்ன செய்ய வேண்டும்?

அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும், நாள்தோறும் நிரப்பப்பட வேண்டும்.

1 நாளா. 16:22 (சங். 105:15) நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலிருங்கள்.

நல்ல எடுத்துக்காட்டு தாவீது.

சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப் போடுவேன் என்று ஈட்டியை எறிந்தான் ஆனாலும் தாவீது விலகி இரண்டு தரம் தப்பினான் (1 சாமு. 18:11)

தாவீதைக் கொன்று போடும்படிக்கு சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும், தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான் (1 சாமு. 19:11)

சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடப் பார்த்தான்; தாவீது விலகி, தப்பித்துக் கொண்டான். மறுநாள் காலமே தாவீதைக் கொன்று போட சேவகரை அனுப்பினான். இதை அறிந்த மீகாள், தாவீதை ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள். (வசனம் 10–12)

ராமாவுக்கடுத்த நாயோதிலே இருந்த தாவீதைக் கொண்டு வர சேவகர்களை அனுப்பினான், தேவ ஆவி இறங்கி தீர்க்கதரிசனம் சொன்னார்கள், 2ம் முறை, 3ம் முறை சவுல் அனுப்பிய சேவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள், சவுல் வந்தான், அவனும் தீர்க்கதரிசனம் சொன்னான் (வசனம் 20–24)

இப்பொழுதே (தாவீதை) அழைப்பித்து, என்னிடத்தில கொண்டுவா அவன் சாகவேண்டும் என்றான் சவுல், தன் மகன் யோனாத்தானிடம் (1 சாமு. 20:31).

தாவீது மாகோன் வானந்தரத்தில் தங்கினான். சவுல், அவன் சேவகர் தாவீதை பிடிக்கத்தக்கதாய் வளைந்துகொண்டனர்.

பெலிஸ்தியர் தேசத்தின் மேல் படையெடுத்திருக்கின்றனர் என்று ஒருவன் வந்து சொன்னதால் தாவீது தப்பினான், (1 சாமு. 23:19–28) (1 சாமு. 24:1–22 வாசிக்க சவுல் 3000 சேவகரைக் கட்டி தாவீதை பிடிக்க போனான் தாவீதும் அவன் ஆட்களும் என் கேதி ஒரு கெபியில் இருந்தபோது, சவுல், மல ஜலாதிக்கு வந்தான், வனாந்திரத்தில் சவுலை தாவீது கையில் கர்த்தர் ஒப்புவித்திருக்கிறார் என்றார்கள், தாவீதின் ஆட்கள் தாவீது சவுலைக் கொல்லவில்லை, சவுலின் சால்வைத் தொங்கலை தாவீது அறுத்தான், அதனிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டது,

“கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப் போடும்படியான காரியத்தை நான் செய்யாத படிக்கு கர்த்தர் என்னைக் காப்பாராக, அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்” (வசனம் 6, 10)

1 சாமு. 26:1–25 வாசிக்க. தாவீதும் அவன் ஆட்களும் ஆகிலா மேட்டிலிருந்தார்கள், சவுல் 3000 போர் வீரர்களுடன் புறப்பட்டுப்போனான், சவுலைப் பிடிக்க இரவில் சவுலும் அவன் ஆட்களும் நன்கு தூங்கிக் கொண்டிருந்தபோது, தாவீதும் அபிசாயும் அங்கு வந்தனர், அபிசாய் தாவீதைப் பார்த்து இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார், நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாக குத்தாமல், ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டும் என்றான், தாவீது அபிசாயைப் பார்த்து அவனைக் கொல்லாதே கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு குற்றமில்லாமற் போகிறவன் யார்? என்றான், பின்னும் தாவீது நான் என் கையை அபிஷேகம் பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் (வசனம் 8, 9, 11).

சவுல் தலைமாட்டிலிருந்த தண்ணீர் செம்பையும் ஈட்டியையும் எடுத்து சிறிது தூரம் சென்ற பின்பு தாவீது கூப்பிட்டார், விழித்த படைத்தலைவன் அப்னேரிடம் தாவீது கர்த்தர் அபிஷேகம் பண்ணினஉங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற் போனபடியினால் நீங்கள் மரணத்திற்கு பாத்திரவான்கள் தாவீது சவுலிடம் இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும் கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர் மேல் என் கையை நீட்ட மனதில்லாமலிருந்தேன் (வசனம் 16, 23)

2 சாமு. 1:1–21 வாசிக்க பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு எதிராக வந்தனர், சவுலின் 3 குமாரரை வெட்டினர், சவுல் வில் வீரரால் மிகவும் காயப்பட்டு, உயிர் போகாமல், இருந்தபோது ஒரு அமலேக்கியான் அப்பக்கமாக வந்தான், சவுல் அவனைக் கூப்பிட்டு, கொன்றுபோடச் சொன்னான், இனி பிழைக்க மாட்டார் என்றிருந்த அவன் சவுலைக் கொன்று தலையிலிருந்த முடி, புயத்திலிருந்த அஸ்தகடகத்தையும் எடுத்து, தாவீதிடம் கொடுத்தான்.

தாவீது அவனை நோக்கி, கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொன்று போடும்படி, நீ உன் கையை நீட்டபயப்படாமற் போனதென்ன (வசனம் 14) என்றான்.

உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருப்பதாக, கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை நான் கொன்று போட்டேன் என்று உன் வாயே உனக்குவிரோதமாக சாட்சி சொல்லிற்று (வசனம் 16).

ஒரு வாலிபனை அழைத்து அமலேக்கியனை வெட்டிப்போடச் சொன்னான், தாவீது புலம்பல் பாடினான், அதில், சவுலை தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர் போல, அவர் கேடகமும், அவமதிக்கப்பட்டதே (வசனம் 21) என புலம்பினான்.

கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைத் தொடாதே, கொன்று போடாதே தூஷிக்காதே, கற்களை எறியாதே 2 சாமு. 16:5–13 வாசிக்க அப்சலோமுக்கு பயந்து தாவீது ஓடுகையில், சீமேயி தூஷித்தான், அப்சலோம் இறந்தபின் ஜனங்கள் தாவீதை திரும்ப அழைத்து வந்தனர், அப்போது சீமேயி தாவீதிடம் மன்னிப்புக் கேட்டான், அபிசாய் கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை, சீமேயி தூஷித்தபடியினால், அவனை அதற்காக கொல்லவேண்டாமா என்றான் (2 சாமு. 19:21) தாவீது, சீமேயியைக் கொல்ல அனுமதிக்கவில்லை.

